ந.க.எண் 15 / AST / 2020 நாள் : 21 .1.2020

பத்திரிக்கை செய்தி

தஞ்சாவூர் மாவட்டம்

மத்திய அரசின் மாற்றுத்திறனாளிகளுக்கான தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டை வழங்கும் திட்டம்

{ Unique Disability Identity (UDID) Card }

## மாற்றுத்திறனாளிகளுக்கு மத்திய அரசின் UDID Card பதிவேற்றும் செய்து வழங்கிடும் பொருட்டு விண்ணப்பங்கள் சேகரிக்கும் முகாம்

நாடு முழுவதும் மாற்றுத்திறனாளிகள் பற்றிய புள்ளி விவரங்களை சேகரிக்கவும், அரசின் திட்டங்கள் பற்றிய விவரங்களை மாற்றுத்திறனாளிகளுக்கும், பொது மக்களுக்கும் எளிதில் கொண்டு செல்லும் நோக்கத்திலும், மத்திய அரசின் தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டை **(UDID Card)** வழங்கும் திட்டம் மத்திய அரசால் கொண்டுவரப்பட்டு, தற்போது நடைமுறையில் உள்ளது.

தற்போது, தஞ்சாவூர் மாவட்டத்தை சார்ந்த மாற்றுத்திறனாளிகள் மாற்றுத்திறனாளிகளுக்கான தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டை **(UDID Card)** பெற்று பயன்பெறும் வகையில் கீழ்கண்டவாறு முகாம்கள் நடைபெறவுள்ளது.

| UDID Card விண்ணப்பங்கள் சேகரிக்கும் முகாம்கள் நடைபெறும் அலுவலகங்களின் விவரம் | முகாம் நாட்கள் மற்றும் நேரம் |
|---|---|
| தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள்<br>மற்றும்<br>அனைத்து சமூக பாதுகாப்புத் திட்ட வட்டாட்சியர் அலுவலகங்கள் | 27.1.2020 முதல் 31.1.2020 முடிய மொத்தம் 5 நாட்கள்<br>காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை |

தேவையான ஆவணங்கள்

பாஸ்போர்ட் சைஸ் வண்ணப் புகைப்படம் -2, குடும்ப அட்டை நகல், ஆதார் அட்டை நகல், வாக்காளர் அடையாள அட்டை நகல், வருமான வரிக்கான அடையாள அட்டை (PAN Card) நகல்

(நகல்கள் மிகவும் தெளிவாக இருத்தல் வேண்டும்)

மேற்படி நாட்களில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள அலுவலகங்கள் தவிர கீழே குறிப்பிடப்பட்டுள்ள தஞ்சாவூர் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்திலும் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்படும். மாற்றுத்திறனாளிகள் தங்களின் வசதிக்கு ஏற்ப விண்ணப்பங்களை தாங்கள் குடியிருக்கும் விலாசத்திற்கு அருகில் உள்ள ஏதேனும் ஒரு அலுவலகத்தில் அளித்து பயன்பெறலாம்

மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம்
அறை எண். 14, பிளாக் 3, தரைத்தளம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், தஞ்சாவூர 613 010
தொலைபேசி எண். **04362 -236791**

குறிப்பு : 1. ஏற்கனவே, இணையதளம் மூலமாக விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை. அதோடு, ஏற்கனவே இது தொடர்பான விண்ணப்பம் அளித்தவர்கள் மீண்டும் விண்ணப்பம் அளித்திட தேவையில்லை.

2. மாற்றுத்திறனாளி நேரில் வர இயலவில்லை எனில் மாற்றுத்திறனாளியின் கையொப்பம் அல்லது கை ரேகை பெற்று பாதுகாவலர் வரலாம்

3. இணையதள முகவரி : http://www.swavalambancard.gov.in

மாவட்ட ஆட்சித் தலைவர்
தஞ்சாவூர்
21/1/2020